

பாமாலை 310 - வல்ல இயேசு கிறிஸ்து

1 வல்ல இயேசு கிறிஸ்து நாதா
நல்ல நேச மீட்பர் நீர்;
பற்று பாசம் கட்டு முற்றும்
அற்றுப் போகப் பண்ணுவீர்.

2 அருள் ஜோதி தோன்றிடாமல்
இருள் மூடிக் கிடந்தோம்;
திக்கில்லாமல் பாவப் பற்றில்
சிக்கிக் கொண்டே இருந்தோம்

3 பக்தி ஒன்றுமில்லை பாரும்
சக்தியற்றுப் போயினோம்;
ஜீவ பாதை சென்றிடாமல்
பாவ பாதை நடந்தோம்

4 இயேசு நாதரே இப்போது
நேசமாக நிற்கிறீர்;
என்னை நம்பு பாவம் நீக்கி
உன்னைக் காப்பேன் என்கிறீர்

5 நம்பி வந்து பாவ நாசா
உந்தன் பாவம் அண்டினோம்
தூய ரத்தம் பாயக் கண்டு
தீய செய்கை வெறுத்தோம்.

6 பாவச் சேற்றிலே விழாமல்
தேவரீரே காத்திடும்
வல்ல ஆவியாலே என்றும்
வெல்லச் செய்து ரட்சியும்